பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றகீம்

# திதாறுமாலை

இஃது

தற்கரைபீர்முகம்மது சாகிபவர்கள்

சீடராகிய

வண்ணமலைச்சார்பு நாட்டிலுள்ள

செய்குபீர் முகம்மதவர்கள்

பாடியது.


இட்டா. பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்,

சென்னை சக்கரவர்த்தி பிரஸ்

இதன் விலை] 1947 [அணா 0-5-0

நெ. 189, தங்கசாலை வீதி, மதராஸ்.



250

DRAS

Q7:417

N47

114169

பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றகிம்

# தீ தா ரு மா லை.

இஃது,

தற்கரைபீர்முகம்மது சாகிபவர்கள்

சீடராகிய

வண்ணமலைச்சார்பு நாட்டிலுள்ள

செய்குபீர் முகம்மதவர்கள்

பாடியது.

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்.

இதன் விலை] 194 . [அணு 5.

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

# இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முஹ்யித்தீன்மாலை 5-முனாஜாத்து சேர்ந்தது | 0 | 10 | 0 |
| நசீகத்துல் இசுலாம்ஹனபியா | 0 | 10 | 0 |
| மேற்படி ஷாப்பியா | 0 | 10 | 0 |
| மெஞ்ஞானரத்தின அலங்காரக் கீர்த்தனை | 1 | 0 | 0 |
| திருமுடியிறக்கிய ஹதீது | 0 | 3 | 0 |
| மரண விலக்கம் மனதை துலக்கம் | 0 | 5 | 0 |
| ராஜமணிமாலை | 1 | 4 | 0 |
| நசிஹத்துநாமா | 0 | 3 | 0 |
| காசீம்படைப்போர் | 0 | 4 | 0 |
| சக்கறுத்து நாமா | 0 | 3 | 0 |
| சத்துருசங்காரம் | 1 | 0 | 0 |
| சையித்தூன் கிஸ்ஸா | 0 | 10 | 0 |
| ஞானமணி மாலை | 0 | 6 | 0 |
| ஷன்மூன்றலியார் கிஸ்ஸா | 0 | 6 | 0 |
| குறமாது | 0 | 10 | 0 |
| பெண்புத்திமாலை | 0 | 3 | 0 |
| தொழுகை அடவு | 0 | 3 | 0 |
| சலவாத்துப்பாட்டு | 0 | 3 | 0 |
| தொழுகைநாமா | 0 | 3 | 0 |
| இரத்தினமுஹம்மது காரணசரித்திரம் | 0 | 10 | 0 |
| பிசுமில் குறம் | 0 | 8 | 0 |
| தீதாறுமாலை | 0 | 5 | 0 |

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலைத்தெரு, மதராஸ்.

பிசுமில்லாகி.

## மகுதூம்முகம்மதுப் புலவரவர்களாற் செய்யப்பட்ட முகவுரை வாசகப்பா.

எல்லாவுலகங்களையும் உயிர்களையும் அமைத்துண வீந்தாளு
கின்ற வல்லதன்மையுள்ள அல்லாகுத்தஆலா யெல்லாம் படைக்க
முன்னே இலங்குந்தன்னூறினல் படைப்புள்ளவைக்கெல்லாம்
பார்த்திவராக முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவ
ஸல்லமவாகளை யமைத்துத் தன் தோழரென்றுந் தன் நுதரென்
றுந் தனக்கு வந்தோரென்றுந் தானே புகழ்ந்து முதல்நபியென்ற
முத்திரை பெயருங் கொடுத்து அந்நபியா நம்மை யெவ்வஸ்து
மறியவேண்டுமென்றெண்ண விருப்பமே பெரியதாய் ஆதமை
யத்தே அவக் மகமகவாய் லட்சத்திருப்பத்திநலாயிர நபிகட்கும்
முந்நூற்றுப் பதின்மூன்று முசலாகிய நபிகட்கும் காத்திமுல்லன்
பியாவாகக் காரணத்தோடு சீருஞ் சிறப்புஞ் செல்வமுங் கல்வியும்
பேருந்தழைத்துப் பெருகிய மக்காவில் அதுனன்கிளையில் அப்
துல்முனபு புத்திரராய்த் தழைத்த திருள்ள அப்துல் ஹாசீ
வென்னுமரியவர் அவர் மகன் அப்துல் முத்தலிபாகினோர் பெற்ற
மக்களிற் சிறந்தோர் மகத்துவமுடையோர் பேருடையோர் பெரு
மையுடையோர் வீருடையோர் வெற்றியுடையோர் சுத்தியுடை
யோர் கல்வியுள்ளோர் கழறும்பெப்புகழுமுள்ள அபதுல்லா அவ
ரொகனுதல்மீது ஒளிவர்யழைத்தும அவ்வப்துல்லா மனைவியார்
அழகினினழகர் அருளினிலருளார் பொறையிற் பொரையார் புக
ழினிற் புகழார் கற்பெலாந்திரண்ட காரிகையெந்தநலமு மெழில்
கொண்ட ஆமினர் தங்கள் வயிற்றிருத்தியும் தரணியில் அநேக
காரணத்தோடு பிறப்பித்தனன். பிறந்து வளர்ந்த பெருமை முகம்
மதற்கு வியந்தோர் நாற்பதில் வள்ளலனுப்பிய சதுமாமறை புறுக்
பானெனச் சாற்றிய வேதமுறையோடு முநர்ந்து முபங்கிடத்தை
யோர்ந்த ஞானியார் மவுனியர் மன்னுயிரெல்லாந் தன்னுயிர்
போல் எண்ணிடுமெண்ணத்தார் இரக்கத்தார் துறக்கத்தார் அறக்
கற்றூர் பெருக்கத்தார் மதப்பற்றூர் உருக்கத்தார் ஞானமணி
பாடிய ஞானகுருவார் தற்கரைபீர் முகம்மது சாகிபவர்கள் சீடர்
தெவிற் றெளிந்தோர் தேடருங்குருவார் சரிதை கிரிகை யோக

ஞானந் தன்னை யுணர்ந்தோர் அற்பினிலாகிய ஆகமத்தோர் சரி அத்து தரீக்கத்து ககீக்கத்து மகரிபத்திந்நான்கும் எழிலொடு தேர்ந்தோர் நலமெல்லாமுள்ளனா நீர்வளம் நிலவளஞ் சிறந்த வண்ணமலைச் சார்பென்னும் வளம்பெருநாட்டினர் செய்குபீர் முகம்மதென்று செப்பிடு நாமத்தார் சொல்லுமித் தீதாறுமாலை சுகியொடும் பாடினார் இந்தத் தீதாறுமாலையை யேட்டிலெழுதிப் படித்து வந்தோர்கள் எழுத்துச் சொற்களறியார் தெவ்விடத்தும் வழங்குதலால் முத்திப் பொருளீதென்ன முயற்சிகொண்டு அச் சிட்டால் யார்க்கும் அறியறிதான வுண்மைத்தெளிந்து கொள்வா ரென்னத் தனமுங் கனமுந் தயவுங் குணமும் நயமுஞ் சயமும் நலமும் புகழும் பொறையும் அறமும் அன்பும் ஆதரவும் உள்ள னார் தேனொழுக்கையுண்டு தித்திப்புமீறி ஆன அறுக்கால்வண்டனு ராகம்பாடும் பூமாலி பூங்காவுசூழ் ஆடகமிருந்துறும் அழகிய வேடர் சந்தையூரென்னும் மேன்மையார் நாட்டினர் ஆராறும் போற்றும் அழகிய மீராவுசைன் ராவுத்தர் மேன் மகவான செய்யி துபா பாராவுத்தரென்போர் செய்தவமெலாந் திரண்டுமணியா யணியாய் மருளையகற்றும் மாண்புறு நூலுணர்ந்தோன் யுந்தியின் மிகுத்தோன் உதவியிற் சிறந்தோன் பத்தியுள்ளான் பண்புள் ளான் நண்புள்ளான் ஆயுறுவேதமாய்ந் துணர்பண்டிதன் கற்பங்க ளுண்டு காயசித்தியுள்ளோன் சரத்தையுள்ளடக்கித் தவஞ்செயு மேலான் அட்டசித்தி நவசித்தி யறிந்துள சிந்தையன் யோகஞா னம் உண்மைமுறை தெளிந்தோன் மலைபினோர் புஜத்தன் முகம் மதுமீராவுசைன் ராவுத்தர் முயற்சியால் மதுரைமாநகரிற் சிறப் போடும் அச்சிட்டு வன்னமாமுடிந்தன வல்லனருளினாலே.

முகவுரை வாசகப்பா முற்றிற்று.

பிசுமில்லாகி.

# தீ தா ரு மா லை.

காப்பு.

வெ ண் பா

உட்லறிவு ஞானமிகு முண்மையினையான் கூறக்
கடலறிவு தந்தருள்வாய் கத்தனே—திடமுடனே
ஜெகமினிலுந் தீதாறைச் சேவித்தோர் தங்களுக்கு
மகமகழிந்து நீயருள்செய்யாதி.

## கண்ணிகள்

சீர்பெருமாதி தீதாறைச்செப்புதற்கு
நேர்பெருருஞான நிண்ணயங்கள்குன்றாமல் 1

எல்லாவுயிர்க்கு மிரணமிகஈவனே
அல்லாவேயுன்ற னருளுதவிசெய்வாயே 2

சல்லல்லாவள்ளல்நபி சபா அத்துமுண்டாசல்
வல்லநபியிறசூல் மலர்ப்பாதம்போற்றிசெய்வேன் 3

ஆதநபிமுதலா யாருமன்பியர்க்கடமை
நீதமுறப்போற்றி நிகழ்த்துவேனெந்நாளும் 4

ஆலமதிற்காபிர்களை யடர்ந்துவெட்டியரபுமிகும்
நாலியார்கள் பாதநான்மறவேனெப்போதும் 5

கத்தனருள்பீபி காத்தூனச்சென்னத்தெனும்
பத்தினியார் தம்மைப் பண்பாகப்போற்றிசெய்வேன் 6

சொர்க்கத்துகில்ஜிபுரில் சோபனமாகக்கொடுக்கும்
வர்த்தத்தசனுசைனின் மலர்ப்பாதம்போற்றிசெய்வேன் 7

ஆலநபிவுலா தவர்தோழராகிவளர்
மாலசுகாபிகளை வாழ்த்தித்துதிப்பேனே 8

மேலானவேத விரிபொருளுணர்த்துகின்ற
நாலிமாம்கடம்பை நான்மறவேனெப்போதும் 9

வல்லானருளால் பகுதாதில்வாழ்ம்பு
ஞுல்காதிர்முகியித்தீன் சீர்பாதநான்மறவேன் 10

நாகூர்ப்பதிவாழு நல்லசாகுல்கமீதின்
வாதார்பதத்தை வாழ்த்தித்துதிப்பேனே 11

சாதரத்துபீர்முகமத் சாகிபவர்களிரு
பாதாரவிந்தசம் பரவிப்பணிவேனே 12

ஆகிரபிகிசுறத் தாயிரத்திருநூறே
டோதும்மைப்பதாம்வருட முறைக்கும் றமலான்மாதம 13

தங்குதெய்திபத்தொன்பதிற் சார்ந்ததிங்கள் ஜெயவருடம்
மங்களஞ்சேர்தைமாதம் வளர்தெய்திபெட்ட திலே 14

கம்மலிருள்கற்றிக் கதிர்விரிக்குந்தீதாறை
யம்மானையாக வறைந்தேன் புவிமீதில் 15

இல்லல்லாதெரிசனைதா னெல்லவர்க்குமுண்டாகக்
கல்பிலுவந்து கழறினேன்றீதாரை 16

ஒதரீர்முன்னே யொருசிரட்டை நீரைவைத்துப்
போதுமென்பார்போலப் புரிந்தேன் புலவர்கள்முன் 17

சொன்னமிகுமீராஞ்சி சொல்வளருமேரிநகர்
வன்னமலைச்சார்யில் மலர்மீரா செய்தவத்தில் 18

வரிசைமுகம்மதருள் வளர்செய்து முயிகித்தீன்றந்
தெரிசனைவணக்கமிகும் செய்குபீர் முகம்மதென்போன் 19

எள்ளுக்குளெண்ணெயைப்போ லிருந்ததொருநற்பொருளை
விள்ளத்துணிந்ததொரு வேதனருளாலே 20

கல்லுக்குள்ளேமுளைத்த கதலியதுபூத்தாற்போற்
றில்லிக்குள்ளேயிருந்த செம்மலதுதிறந்து 21

ஈமானிவாறு கிசுலாத்திலைந்ததுடன்
ஞுமானமாக நடக்கும்வகை சொல்லுகிறேன் 22

சரதாத்துபீர்முகம்மத் சாகிபவருளால்
நாதாந்தந்திறவுகோலை நவில்வதற்கு நாயகனே 23

வல்லாவெனக்கு வாக்கருள்வாயாண்டவனே
சல்லல்லாகுஅலைகி சையிதிறசூல்பொருட்டால் 14

சறகுவழிநான்கைச் சாவைமறந்துவிட்டும்
பிறவிக்குருடர்கள்போற் பிசகாய்த்திரியாமல் 25

சரிஅத்துமுதல்வழியுந் தனையுமறிந்துணர்க
தரிகத்தும் அகீகத்துந் தன்னுடலிற்றுனறிய 26

ஜெகத்திலேயுள்ளவர்க்குச் செப்புகிறேன்றீதாரை
யுகப்பாகநம்முடலி லுடையோனமைத்தவகை 27

பாலுட்டயிருசெய்யும் பதிந்தங்கியிருந்தாற்போல்
தாயில் அலிபைத்தானே யமைத்துவைத்தான் 28

காலுமதின்றலையுங் கண்டறியாரிவ்வுடலில்
நூலின்வகையறியார் நுவல்நூரையும்மறியார் 29

அல்லாமுகம்மதுவை யவருடலிற்றானறியார்
அல்லாவுடையபங்கு மவன்சிபத்தையும்மறியார் 30

ஆலநபிபங்கு மவரடையாளம்மயார்
வாலகுருவறியார் வாலிபப்பொருளறியார் 31

ஒலுவினீயத்து மொலுவின்பறுலறியார்
ஒலுவன்சுன்னத்து மொலுவின் முறிவறியார் 32

தொழுகையினீயத்துந் தொழுகையின்பறுலறியார்
தொழுகையின்சுன்னத்துந் தொழுகைமுறிவறியார் 33

ஐந்துமாமைமறியா ரைந்துகிபுலர்வறியார்
ஐந்துகலிமாவு மதின்விபரமும்மறியார் 34

பஞ்சுடலிற் பாரகசியம்மறியார்
பஞ்சபூதமைந்துடைய பங்குகளுந்தானறியார் 35

மூச்சிநிலையறியார் முன்னவனைத்தானறியார்
பேச்சிநிலையறியார் பீர்நிலையும்தானறியார் 36

சூழ்ச்சமுறுமூச்சின் சுழிமுனையுந்தானறியார்
கூச்சமதைத்தானறியார் கூடுந்தலமறியார் 37

ஈமானிசுலா மின்னதென்றுந்தானறியார்
நாமானநற்கலிமா நான்கெழுந்துந்தானறியார் 38

தன்பேர்தனையறியார் தாய்தகப்பன்பேரறியார்
இன்பந்தனையறியார் இரவுபகலைஇயறியார் 39

ஓதுமவுசு தொடுங்குந்தலமறியார்
பாதுமாழ்ப்பூக்காத பாழ்வீடுதானறியார் 40

குண்டலியைத்தானறியார் குருவின்பொருளறியார்
மண்டலங்களேழறியார் மசுக்குந்தானறியா 41

நீதிதனையறியார் நித்திரையுந்தானறியார்
ஆதிநிலைதானறியார் அலிபுனிலையை இயறியார் 42

ஏழுகடலேழ்வான மெழுபுவியுந்தானறியார்
வாழும்பதியின் வகைவிபரந்தானறியார் 43

முழுக்கினழுக்கைமூழ்குந் துறையறியார்
இழுக்குமிரவுபக லிறையோனிருப்பறியார் 44

பூக்குந்தலமறியார் புதுமலருந்தானறியார்
சாகாதகாலும் ஜாலாலுஞ்ஜமாலறியார் 45

வேகாத்தலையும் வேதமுதலறியார்
ஆகாத்தியத்தா லழியுந்தலமறியார் 46

சூலமதாகிநின்ற சுழித்தவெழுத்தறியார்
மூலமென்றமூன்றெழுத்து மூக்கோணமும்மறியார் 47

ஆதம்மலையறியார் அறபாத்துந்தானறியார்
வேதமலைபொன்னின்மலை வெள்ளருந்தானறியார் 48

பச்சைமலைபவளமலை பனிமுகிலுந்தானறியார்
வச்சிரமலையிருளின்மலை வாகமலைதானறியார் 49

நாயனதுபங்கு நவிசிபத்துந்தானறியார்
நேயநபியுடைய றெவுலாவுந்தானறியார் 50

காட்சிபெறவந்த கதிமாத்திமாபீபி
நாச்சியாரிருக்கு நல்லதலம்மறியார் 51

நான்குவகைப்பீர் நான்குபக்கீறைஇயறியார்
நான்குஇமாமும் நான்குகிபுலாவை இயறியார் 52

நான்குமாகாமும் நவில்நான்மலக்கறியார்
நான்குநபுசும் நல்றாதுந்தானறியார் 53

நால்யார்கடங்களோடு நல்லானுசைனை இயறியார்
பால்பெருகுமேலோர் பணியுமிடமறியார் 54

உந்திதனையறியா ரூமையெழுத்தறியார்
சந்தினையறியார் அருமையுந்தானறியார் 55

ஆதிதனையறியார் சமுசாரமுந்தானறியார்
மாதமொடுதிங்கள் வருடமதைத்தானறியார் 56

நாலுமதகரியார் நாற்கோணந்தானறியார்
தாலுமதையறியார் தரிக்கும்பொருளறியார் 57

சரமின்வகையார் சஞ்சரிப்புந்தானறியார்
திரியுங்குணமறியார் திறவுகோலைஇயறியார் 58

தானுந்தனையறியார் தலைவனையுந்தானறியார்
ஆணும்பெண்ணுமான அல்குலமுந்தானறியார் 59

நூறுனுநல்லெழுத்து நூறின்வகையறியார்
நூறுகிநம்முள் நூனிற்றுலங்குதுபார் 60

வேதமதிலுள்ளதைநான் விளம்புகிறேன்கோளுமினி
ஆதமக்களெல்லோர்க்கும் மழகாகச்சொல்லுகிறேன். 61

தெரிந்துதெரியார்கள் தீர்க்கம்பெறவேயிதனை
யறிந்தமட்டு நன்றாயருளுகிறேன் கேளுமினி 62

காலும்பணராகுங் கழறுந்தலைவேறாய்
ஆலவிருட்சமதை யாதியமைத்துவைத்தான் 63

கற்பகவிருட்சமல்லோ கால்மேற்றலைகீழா
யிப்போதுன்பாவி லிறக்கிவிட்டான் வெறுமரமாய் . 64

சூழ்ச்சமதுகண்ணாதஞ் சுழிமுனைநுக்தாகுங்
கூச்சமதுமூச்சுங் கூடுவது நபுசுத்தலம் 65

திறவுகுருமொழிதான் தீதாறுகல்பாகும்
திறவுகோல்மூச்சாகுஞ் செப்பமுடியாதுகண்டீர் 66

மூமினதுகல்பாகு முசாபரதுகாலாகும்
ஆமீன்பிசுமில் அடிமுடியுந்தானாகும் 67

நாமானமாக நவிலுகிறேன்ஈமானை
யீமானிலாறு மியம்புகிறேன் கேளுமினி 68

ஈமானிலாறு மிசுலாமிலைந்துடனே
நாமானமாக நடக்கும்வகைசெப்புகிறேன் 69

ஈமானிலேமுதற்றா னிறையொருவன்றானாகும்
ஈமானில்ரண்டாவ திறைமலக்குத்தாமாகும் 70

ஈமானில்மூன்றாவ திறைவேதந்தானாகும்
ஈமானில்நான்காவ திறைதூதர்தாமாகும் 71

ஈமானிலைந்தாவ திறைவன்கியாமத்தாம்
ஈமானிலாறாவ திவர்கள்செய்யுநன்மைதின்மை 72

இசுலாமிலைந்துவகை யியம்புகிறேன்கேளுமினி
இசுலாமிலேமுதற்றா னிறையோன்கலிமாவாம் 73

இசுலாமில்ரண்டாவ திறைவன்தொழுகையதாம்
இசுலாமில்மூன்றாவ திறைவன்சக்காத்துவாம் 74

இசுலாமில்நான்காவ திறைவனோன்பாகும்
இசுலாமிலைந்தாவ திறைவனதுகஜஜாகும் 75

ஐந்துமாமின்விபர மருளுகிறேன்கேளுமினி
சந்தமிகுஞ்சடலந் தானதுவேயொன்றாகும் 76

இரண்டாவதுறாகுநிலை நல்லகல்யுமூன்றாகும்
குன்றாதபுத்தியது கூறினேனான்காகும் 77

அஞ்சாவதுநினைப்பா மறிந்துகொள்ளுமிமாமைந்தும்
எண்சாணுடலி லியம்புங்கிபுலாவைந்தும் 78

ஒன்றுவதாம்அறுசு வுயர்குருசிரண்டாகும்
நன்றாகும்பைத்தல்மகு மூறதுவேமூன்றாகும் 79

இலங்குகின்றபைத்தல்முக்கத் தீசதுவுநான்காகுந்
துலங்குககுடாவோடு சொன்னவிதமைந்தாகும் 80

அஞ்சுமகாமை யருளுகிறேன்கேளுமினித்
தஞ்சமுள்ளநல்ல தகுமானதீனோரே 81

ஒன்றுவதுநபுசு வுரைக்குகிறேனூத்தை
மண்ணுவதுவெள்ளை வாய்சிபத்துப்பேச்சாகும் 82

முழங்குகின்றவாயிருப்பு முகம்மதிறகூலாகும்
விளங்குகின்றதோலதுதான் வேதமுகம்மதுவாம் 83

சரிஅத்துப்பீர்சாது சைகுபகீர்தீனாகும்
சரிஅத்துத்திக்கீர் ஜல்லிஜாத்துப்பன்னிரண்டு 84

உள்ளதலம்பின்கொம்பை யுரைக்குகிறனிவ்வுடலில்
உள்ளதலம்பல்லக்குத்தி யுயருங்கொம்புநாக்காகும் 85

கரிகத்திரண்டாவதீ சாற்றுகிறேன்மலக்கூத்தை
தரிகத்துத்தண்ணீராங் தண்ணீர்நிறைஞ்சிவப்பாம் 86

கரிகரித்துலௌவாமத்துத் தானதுகண்ணாகும்
சரிகத்துமகாமற் றூனரசுஈசர்வாம் 87

ஈசாநபிதமக்கே யேவல்செய்வோர்மீக்காயீல்
கூசாதினிமேற் கூறுமொழியைக்கேளும் 88

தரிகத்துச்சதையாகுந் தன்னுறுதிதானாகும்.
தரிகத்துத்திக்கீர்கல்வி தானெழுத்தும் ஆறாகும் 89

உள்ளதலம்பின்கொம்பை யுரைக்குகிறேனிவ்வுடலில்
உள்ளதவங்கறுப்பீரல் உயர்கொம்புகண்ணாகும் 90

அகீகத்துமூன்றுவ தருளுகிறேனிவ்வுடலில்
அகீகத்துக்காற்று மதனிறமும்பச்சையதாம் 91

அகீகத்துமுதலீமா னறைகிறேன்ஜெபறாத்தை
அகீகத்துமூக்காகும் அரசதற்குமூசாவாம் 92

மூசாநபிதமக்கு முன்னடப்பிசுறாயீல்
காசாவாயிருப்பரென்று கற்றோர்கள்சொன்னாரே 93

அகீகத்தெலும்பாகு மானதொருஅகியதாய்
அகீகத்துவீட்டி லருள்கலிமாநாலெழுத்தாம் 94

உள்ளதலம்பின்கொம்பை யுரைக்குகிறேனிவ்வுடலில்
உள்ளதலம்நுரையீர லுயர்கொம்புமூக்காகும் 95

மகரிபத்து நான்காவது வழுத்துகிறேனிவ்வுடலில்
மகரிபத்துநெருப்பா மதினிறங்கறுப்பாகும் 96

மகரிபத்துவீட்டின் மன்னரிபுரூசிம்நபி
துகளில்நபிக்குத் தூதிசுரூயீலாம் 97

மூழங்குகின்றபீர்காதிர் மூஹியித்தீனாண்டவரின்
தழங்குங்குணத்தைச் சாற்றுகிறேன்கேளுமினி 98

காதிரிய்யாய்சிற்று கலிமாவிலிரண்டெழுத்தாம்
காதிரிய்யாமேலக்கூத்துக் கண்ணிற்கடக்காது 99

உள்ளதலம்பிற்கொம்பை யுரைக்குறேனிவ்வுடலி
னுள்ளதலம்பித்தாகு மூயர்கொம்புகாதாகும் 100

லாகூத்தெனுங்கொலுவுல் நன்மையல்லால்வேறில்லை
லாகூத்மக்காமை நன்றுரைப்பேன்கேளுமினி 101

அஞ்சாவதுவீட்டை யறைகிறேன்ஜபாகுந்
துஞ்சாதநாக்குத் தூறுஅமாமலக்கு 102

ஐந்தாவதுவீட்டி லருள்கலிமாவொன்றாகும்
ஐந்தநபுசதுதாறு சாய்ந்தாமரைக்காய் 103

செஞ்சிலறிவீரால் நிற்குங்கொம்புமூளையதாம்
வஞ்சகமில்லாத வல்லபெரியோரறிவார் 104

மூளையொடுநாகிருந்து மூச்செறியுமங்கமெல்லாம்
பாழானகித்திரையிற் பலநினைவங்கில்லாமல் 105

காலாலுயர்த்திக் கலிமானுருவானல்
மேலானநோக்கம் வெளியாகும்நம்முன்னே 106

வாகுபெரும்லாகூத்தில் வழுத்துங்குருச்சொற்படியே
சாகமுன்னேதானே தன்னையறிந்துணர்வீர் 107

காமில்மொழியதனைக் கனவில்மறவாதே
பூமியுவக்காதே புலைகொலைகள் செய்யாதே 108

நினைவைக்கலிமாவில் நிறுத்திச்சுரூதுசெய்தால்
கனவுநினைவாகுங் கண்டபொருள்மெய்யாகும் 109

அருமதெனுங்கண்ணாடி யழகியகல்பாகும்
மூகம்மதுதெரிசனைதான் முற்றிலுமேபெற்றிருப்பீர் 110

குருவின்மொழியதனைக் குறிப்பாய்மனதிருத்திக்
கருவூரிலெழுப்பிக் கமலத்தழுக்கறுத்து 111

மூழித்துத்தனித்திருந்து முருகிபாத்தானுகி
வழுத்துங்குருமொழியை வாசிதனிலேற்றி 112

ஞாபகமாய்க்காலதனால் நன்றாயுயர்த்திக்கொண்டு
பாவகமாமேல்வாசற் பணிந்துசுழிமுனையின் 113

மேல்வாசற்பார்த்துவந்தால் மேலோனொளிதுலங்கும்
பரல்வகையாருண்மையிதை பற்றித்தொடர்ந்துகொள்வீர் 114

சார்ந்தசரந்தனிலே சரத்தையிழுத்தடைத்துக்
கூர்ந்தணினவோடிருந்தார் கூறமுடியாது 115

தீதாறுவாசற் றிறக்குங்குருவருளால்
ஆராதரந்தாண்டி ஆகூத்தைப் பார்த்துவந்தால் 116

காலனுமேவாரான் காட்சிமிகத்தான்காண்பீர்
உலகினுள்ளவாழ்வு மொருநொடியிற்போய்விடும்பார் 117

அலைந்துதிரியாமல் அசதிருகையுந்தள்ளி
மெலிந்தவர்போலென்று மேதினியிலேயிருப்பீர் 118

மேவுமுகத்தாட்சியையும் வெடிசிரிப்பையுந்தள்ளி
யேவலெடுத்துநட விழுக்கார்விலகல்விடு 119

தீனையுவந்து திருக்கோணஞ்சென்றேயி
மானைநிலைநிறுத்தி மயிர்கோலங்கொண்டிருப்பாய் 120

தானவனுமொன்றானாற் சலிப்பொன்றுதானுமில்லை
தேனைமிகஅருந்தித் தெவிட்டாமலுண்டிருப்பீர் 121

ஏவல்தனையகற்றி யேவில்களெடுத்துக்கொண்டால்
சாவுகடனாகுஞ் சஞ்சலமுந்தீராது 122

ஆளுவதுதானரக மைஞ்ஞூரெவவருடம்
வீழுவதுதிண்ணமென்று வேதாம்பர்தாமுரைத்தார் 123

சாகமுன்னேநீங்கள் தௌபரவைத்தேடிக்கொள்வீர்
லாகுபெறநீங்கள் மனதிற்றெளிந்துகொள்வீர் 124

முத்திகலிமாவதல்லால் மொழியவேறொன்றுமில்லைச்
சத்தியமாச்சொன்னேன் றவிராதீர்கலிமாவை 125

மூமீன்றனக்கு முறையிதுவேதானாகும்
ஆமினல்லாவா மீனறிந்தேதவம்பெறுவீர் 126

புத்திகெட்டுமானிடரே பிழைமோசம்போகாமற்
பற்றியெழுமூச்சை பரமபதஞ்சேர்த்து 127

நித்தமூங்கலிமாவை நினைவிலுவந்திருந்தார்
செத்தவுடலுயிரும் சென்மக்கரைசேரும் 128

உற்றுணர்ந்துபார்த்தா லுனங்கமெல்லாமோரொளிவாய்த்
தத்துவமுமேறுஞ் சரீரபலமுண்டாம் 129

அல்லா றசூலை யவனொளிவிலேபிரித்து
மல்லார்புவியனுப்பி வெல்லோன்றனைவணங்க 130

பொல்லாக்குபிரகற்றிப் புகழ்கலிமாவுவந்திருக்க
அல்லாவின்றாத ரறிவித்தார்தீனோர்க்கு 131

தீனிசுலாமாக்கிச் செங்கோலுந்தானிறுத்தி
யாணியதுபூட்டி யானதொருகியாமமட்டும் 132

தானேயரசாளத் தானவனுண்டாக்கிவைத்தான்
நாமானநற்கலிமா நழுவாமலெந்நாளும் 133

முருக்கிபாத்தானுவந்து முழித்துத்தனித்திருந்து
பராக்கில்லாமல்நீங்கள் பரிவுடனேயெந்நாளும் 134

அஞ்சொருத்துநீங்க ளன்பாய்த்தொழுதுகொள்வீர்
தஞ்சமுடனென்னாளுந் தானவனைப்புகழ்ந்திருப்பீர் 135

அழுகையில்லாத்தொழுகை யாற்றையடுத்தமரந்
தொழுகையில்லாமுரீது தோப்பில்லாக்கனியதுவாம் 136

ஆனதால்நீங்க ளறிந்துதவம்பெற்றாக்கால்
பூணறையார்மாதருறும் புகழ்சுவர்க்கங்கிட்டுமென்றார் 137

திறைதிறந்தெந்நாளுந் தீன்கலிமாவுவந்திருப்பீர்
முறையறிந்துணர்ந்தவர்க்கு முறியா தொழிலாகும் 138

மறையறிந்ததிண்ணமதில் மவுரூதுவந்திருந்தால்
மறையேவல்வினைவுவந்தால் மவுரூதுதொழுகையதாம் 139

குறைவில்லாச்சோதிதனைக் கூடிக்கலக்குகின்ற
முறைகலிமாமூச்சானால் முறியாதநோன்பாகும் 140

பேச்சுமிகுமுச்சும் பிரியக்கலிமாவானாற்
காட்சிநிதமுண்டாகுங் கலிமாவந்திருக்க 141

அசையாதீமானு மாதியொளிபிறக்கும்
பிசகாதுடலுயிரும் பிரியார்தொருநாளும் 132

ஆச்சரியமுன்கபறி வரம்பைமாரருகிருந்து
வாய்தமுதுப்பொன்மாலை மாடவார்கடான்முடித்து 143

ஆச்சரியமாவுவந்தே யடிபணிந்துகால்கழுவி
கூச்சமற்றுப்பொன்மாதற் கூந்தலாற்கால்துடைப்பார் 144

இந்தநல்லபொற்பதிதா னெல்லோர்க்குங்கிட்டாது
சிந்தைக்குபிரகற்றித் தெளிந்தவர்க்குக்கிட்டுமென்றார் 145

பொய்த்துனியாவைநம்பிப் பொன்னுலகிழக்காமல்
மெய்ப்பொருளைப்பார்த்து விருப்புவீர்தீனோரே 146

சக்கில்லைச்சொன்னேன் சார்ந்துகொள்ளுநந்தியைத்தான்
பிக்கீரிலகாமற் பீர்மாடரிஞ்சேரும் 147

பெற்றவர்க்குப்பேறு பெறாதவர்க்குப்பேறில்லை
கற்றுணர்ந்தபோதில் கற்றோனினவனனும் 148

ஏட்டிலெழுதவொண்ணா தெண்ணவொண்ணா திவ்வுடலாம்
நாட்டிவைத்தானோரலிபக் நாட்டமுகம்மதுவாம் 149

சத்தியமாய்ச்சொன்னேன் தவிராதேயிக்கலிமா
யெத்திசைக்குப்போனாலு மிவ்வறிவுகிட்டாதே 150

கல்லாமனங்கரையக் கருகினேன்தீதாறைத்
தில்லாறுவந்துநத்தத் தீனை மகிழ்ந்திருப்பீர் 151

மறையப்புதுத்துறப்பா மகரிபத்தாற்பிரித்துரைத்தேன்
இறப்புப்பிறப்பில்லானை யெழுமூச்சிக்காண்பதல்லால் 152

ஓய்வில்லாமூச்சதனால் ஒருவனைத்தான்காண்பதில்லை
சாவெல்லாவொருவனைத்தான் சரத்திற்றெளிந்துகொள்வீர் 153

புத்தியுள்ளபேர்க்குப் போதுமிந்தநல்லறிவு
புத்தியில்லாதார்க்குப் பூக்காதொருநாளும் 154

அடிமுடியுமதே யாணுமதுபெண்ணுமதே
துடியுமதுகலைபாயுந் துண்டமதொடேழாகும் 155

பிண்டமதுமூலம் பிரணவமுந்தானாகும்
அண்டமதே அகார மானந்தவீடாகும் 156

காபிற்மறதியதாங் காமில்நினைவாகும்
தாபரமுங்கல்பாகுந் தன்மூச்சுப்பாலமவாம் 157

பேச்சதுதான் வகாரம்பெருமூச்சுஉகாரமதாம்
காட்சியதுசிகாரம் கடுங்கேள்வி மகாரமதாம் 158

தீனேநினைவதுவாங் தீன்துனியாகடப்பாமீ
மானேகலிமாவாம் மவுலூதுஹக்காகும் 159

ஒளுவிற்பறுல்நான்கு மூவந்தபத்துச்சுன்னத்தையும்
ஒளுமுறிச்சல்நாலாறை யுரைக்குகிறேன்கேளுமினி 160

தொழுகையின்பறுலு சொன்னார்பதினேந்ததுவாம்
தொழுகையின்சுன்னத்துச் சொன்னார்நாலெட்டதுவாம் 161

தொழுகையின்முறிச்சல் சொல்லிருபத்தோர்நான்கு
கழுவுங்கல்புத்தொழுகை காமீலைக்கேட்டுக்கொள்ளும் 162

தாத்துசிபத்துந் தன்னுடலுயிராகுந்
தாத்துமதுஹக்காகுஞ் சிபத்துமுகம்மதுவாம் 163

மவுனமதுவாகியதாம் வாலையதுறாகாகும்
புவனமதுஜடலம் புகழ்தலமும்பொற்குருவாங் 164

ஆணுமதுபெண்ணுமது அல்லாகுமுகம்மதும்
மாணுமதுதேணை மருவுத்தெளுந்துகொள்வீர் 165

நினைவுகயாத்தாகும் நீண்மறதிமவுத்தாகுந்
தவனமணுகாமற் றூன்பார்த்தறிந்துகொள்வீர் 166

ஆதியகுமது வாமனாதிமுகம்மதுவாஞ்
சோதிநமதுயிராஞ் சுரூபஞ்சடலமதாம் 167

நந்திமுகம்மதுவாம் நாதமதேஹக்காகுஞ்
சந்திமுகம்மதுவாஞ் சமுத்திரமுங்கல்பாகும் 168

முரீதுமொருநாட்ட முறுசிதுவேதேட்டமதாம்
முரீதுபீர்றாகாகு முகம்மதுவேஹக்காகும் 169

சாகாத்தகாலதுகான் சாற்றுஞ்சரமாகும்
வேகாததலையதுதான் வெற்றியுள்ளறாகாகும் 170

ஏகனிருப்பிடந்தா னிரவுபகலற்றவிடம்
வாருகொள்சரமுயிராம் வழுத்துடல்மவுத்தாகும் 171

மக்கமதுகல்பாகு மதினம்புருவத்திடையாம்
சொர்க்கமதுநெஞ்சஞ் சுடுநரகமுந்தியின்கீழ் 172

அறுசுகழுத்தாகும அறியுந்தலைகுறுசாம்
விரிவார்கயாத்து விளங்குகின்றதம்மதுவாம் 173

எழுவான்சிரசாகு மெழுகடல்வயிறாகும்
எழுபூமியின்விபர மெழுமூச்சுத்தானாகும் 174

முழுக்கினழுக்கறுதல் முழுகிவரும்வாஜிபதாம்
முழுக்கின்துறையதுவே மோசமில்லையெப்போதும் 175

கருமும்மத்தியதாம் கலாலும்நினைவாகும்
முருதுநலதாத்தாகும் முஷாகிதாகிபத்தாகும் 176

தாத்துமதுஹக்காகும் சிபத்துமுகம்மதுவாம்
ஏற்றமதுதம்மார்கு மேகவெளியதுவாம் 177

அகதுஉகதாகும் அகுமதுவுமுகம்மதுவாம்
புகழ்போகாநினைவாகும் பூரணமுயிராகும் 178

ஜாலனுஞ்சமாலுந் தானவனுந்தானாகும்
காலுங்கனுமுங் கண்மூடி முழிப்பதுவாம் 179

ஆதமுயிராகும் அவ்வாஜடலமதாம்
வேதமுநாவாகும் விளங்குங்கண்ஐயனாகும் 180

மீமுமுகம்மதுவாம் விளம்பினேனறிந்துகொள்வீர்
லாமுஞ்சிபுரீலாம் நாயகன் அலிபாகும் 181

சீமுமஜாசில்வழியாம் செப்புவேன்பின்னுமேலை
நேமமிதுவே நிண்ணயமாச்சொல்லுகிறேன் 182

பொக்கிஷமுநாமல்லவோ புகழுவதுநம்மையல்லோ
மிக்கமுறையிதுவே மெய்யாயறிந்துகொள்வீர் 183

அலிபென்றவச்சரத்தா லாலமடங்கலையும்
பலிதமுயிரெவ்வெவையும் பரமனளித்துவைத்தான் 184

அலிபென்றுமோதுவர்க ளதையுமுருவாக்கார்கள்.
கலிமாநினைவுவந்து கருத்தாளியகரார்கள் 185

மாதவங்கள்தானறியார் மறையோதும்பாவிகளே
நாதமறியாதார் நாயகனைத்தானறியார் 186

நினைவையறியாதார் நித்திரையைத்தானறியார்
மனதையறியாதார் மாதவத்தைத்தானறியார் 187

காட்சியறியாதார் கத்தர்தனையறியார்
பாச்சிடுங்கோதிக்கீறைப் பழுக்குமப்போகல்பதுதான் 188

ஆச்சரியமெத்த ஐனையறிந்துணர்ந்தால்
காட்சிநிதமூச்சினிற்றான் கலிமாவுவந்திருங்கோ 189

ஐயனையறிந்துணர்ந்தா லாதியைத்தானறிவீர்
ஐனைபுணராவிடிலோ அதாபுக்குளேயாவீர் 190

கருமையுவப்பீரேற் கடுநரகஞ்சேர்வீரே
மிகுருசுபெறவென்றால் மிக்ககலானுவந்திருப்பீர் 191

உந்தன்மனைவியிடத் தொலியசனுவிற்கு
மெந்தவிதமாசூலு மேகன்கலியுவக்காதால் 192

சொந்தமனைவிசுரும் சுறுபுமதுநீங்காது
யெந்தவிதமூழ்கினுமே யிறங்காதவர்முழுக்கு 193

முழுக்குவிதிக்குமுன்னே முழுக்கறுக்கவேண்டுங்கண்டாய்
முழுக்குவிதித்தாலோ முழிக்கவேமுடியாது 194

முழுக்கையறுக்கும் வகைமொழிகிறேன்கேளுமினி
முழுக்குவிதிக்குமுன்னே முன்னேன்கலிமாவுவந்தால் 195

அழுக்கையகற்றிவிடு மமுதமுண்ணுமானிடரே
முழுக்கவும்வாஜிபினால் முழுதுமேதூய்தாகும் 196

வழுக்கவறவேயூதிவிடும் வடிவுகண்டேயோடிவிடும்
பழுக்குமொளிவுதங்கும் பாசமதேயற்றுவிடும் 197

முழுக்குளிக்குமுன்னே முழுக்கறுவிதமிதுதான்
வழுத்துகின்றேனின்னமொன்று வகையுடனேயறிந்துகொள்வீர்

கலிமாப்பிழையானல் கருமானதொழுகையதாம்
கலிமாப்பிழையானல் கருமானசெயற்கையதாம் 199

கலிமாப்பிழையானல் கருமானபிள்ளையதாம்
கலிமாப்பிழையானல் கருமாகுமெங்கடையும் 200

பலியாதிவன்வணக்கம் பகையாய்முடிந்துவிடும்
பெலியானஜாசிற்குப் பெருந்தோழன்ருனவன் 201

பழிகேடராகிப் பாழ்நரகிலேவிழுவார்
கலிமாவுருவானல் கலாலாகும்பிள்ளையுமே 202

இலகுமதபுநெறி யெழில்மிகவுமுள்ளவனும்
கலகங்களவிலனய்க் கர்த்தவனுக்குமுத்தவனய் 203

விலகல்தனையின்னம் விளம்புகிறேன்கேளுமினி
காலாலானமங்கையர்க்குக் கருமானதைந்துவகை 204

வளர்வருடமாதப்பிறப்பில் வளர்பிறைமுதலும்
வளருமம்மவாசிரவு மங்கைபிலாகுமங்காள் 205

வந்தொருநாள்தனிலே மங்கையரைச்சேர்க்கைசெய்தால்
அந்தங்குறைந்துவிடும் அல்லாமுனிவிறங்கும் 206

முன்னுள்ளமுதல்குறைத்து முதேவியாய்விடுவார்
வின்னமதுசொன்னேன் விரும்பாதேதோஷம்வரும் 207

விந்துவிலையறியா வீணரேகேளுமினி
சொந்தமனைவியின்றன் சோபந்தெளியாதால் 208

உந்தன்மனைவியாசை முன்மேற்கடனதும்
உந்தனுடலில்காற்ற முள்ளும்புறமுண்டாம் 209

சந்தாபமில்லையது சாற்றுகிறேன்கியாமத்திலே
நொந்தமீன்போறும் நெய்மெழுகாஉநருஞ்சடலம் 210

இரகமதுபிடித்து கிழ்நகரத்தேயாழ்வார்
பெரியதினமொன்று பேசுகிறேன்கேளுமினி 211

நாளைகியாமத்தில் நாரியரைதோளேற்றி
மாலைநெருப்புச்சட்டை மார்புதனிற்பூட்டிருக்கும் 212

பாலங்கடக்கப் பலமாதாவில்லை
காலமலக்குவந்து கடிந்துநடந்திடுவார் 213

ஆங்கையினல்நீங்க ளறிந்துகொள்வீரில்முனிசா
ஓகைப்படிபெண்சோப மொழிக்கும்வகைகேளுமினி 214

மானுர்தமக்குவளரும் விந்தைந்துமூன்றுதலம்
தானுகதானத்தில்விந்து தான்வந்திரங்கிடுநாள் 215

ஏறும்பிரையெட்டாநா ணிறங்கும்பிறையிருபதிலே
கூறுள்ளவாரவுதனிற் குதிகொள்ளுங்கண்டறிவாய் 216

பாவகமாதீங்கள் பலஞ்செய்யுங்காலந்தனில்
வாவுரகுமானி மறைக்குமுன்குதித்துவிழும் 217

ஆசையதுதீர்ந்துவிடு நாளடிமைதானுவாள்
மாதமதுதீர்ந்துவிடும் பைங்கிளியுந்துய்தாவாள் 218

தோசமதுவராது சொர்க்கப்பதிபெறுவாள்
நேசத்தோடேயிதனை நிண்ணயமாக்கொள்வீரே 219

மூமீன்றனக்கு முறையிதுவேதானுகும்
ஆமினல்லாவமீ னறிந்துதவம்பெறுவீர் 220

மார்க்கமறியாதார் வன்னரகஞ்சேர்வர்திண்ணம்
மார்க்கந்தவறுமல் வண்கலிமாமுன்னிருத்தி 221

தீர்க்கமதாநீங்களுமே தினமுமதுவாகி
மூர்க்கக்கலிமாவுவந்து முழித்துத்தனித்திருந்து 222

வழுத்துங்குருமொழியை மனதில்கபூலாக்கிக்கொள்ளும்
வெழுத்தலிபுவோரெழுத்து வெளிவந்துதோற்றுங்கண்டாய் 223

வழுத்துகிறேனின்னமொன்று மாற்றுன்செயலதனை
யிழுக்காரிபுலீசாசன் மேழையுமியம்புகிறேன் 224

எழுதலத்தி லிபுலீசிருந்துகொண்டு
பாழ்படுத்துறுனதனைப் பார்க்கிலையோமானிடரே 225

கண்ணுவதுகெருடன் காதாவதுபாம்பு
முண்மூக்குவண்டாகும் முழங்கும்வாய்நாயாகும் 226

கையாவதுகுரங்கு காலாவதுகழுதை.
துய்யகுலநபுசு துட்டனிருக்குந்தலம் 227

இந்தப்படியேதா னிபுலீசுவுங்களையும்
அந்தமுள்ளகலிமா வதனைவெறுப்பாக்கி 228

ஆண்டவன்றனேவ லதனைமறக்கடித்துப்
பாண்டனிபுலீசனிவன் பாழ்வலையிலுல்லாக்கி 229

கண்ணிலிருந்துகொண்டு கரும்பார்வையேபார்ப்பான்
கண்ணுவதிசாவவர் கையேவல்மிக்காயில் 230

விண்ணமதுகண்டு விவகிதுவாச்செய்வார்
என்னுஞ்சொர்க்கவோசையே.கேட்குங்காதுதனில் 231

சாதனிபுலீசிருந்து கருங்கேள்வியைக் கேட்பான்
காதிலிருகிமவர்கேயேவலிசுருவீல் 232

ஆதிமுனிவுவர வவர்கள் பதுவாச்செய்யுவார்
ஏதமிலாதிதனை யெழிலாயறிந்துகொள்விர் 233

மூக்கின் வீசாவிருப்பு மொழியுமதின்மூதேவி
காத்தனிபுலீசிருந்து கருமானவாசங்கொள்வான் 234

மூசாநபிக்கேவல்செய்வோர் முன்மலக்கிசுருபீல்
சாசினடப்பறிந்தே யவர்கள்பதுவாச்செயுவார் 235

வாயுமுகம்மதின் மலக்குஞ்சிபுரீலாம்
வானிடமதிலே வம்பனிபுலீசிருந்து 236

காயமானதையகற்றி கருமையுவப்பச்செய்வான்
மாயநடப்பறிந்து முகம்மதுபதுவாச்செயுவார் 237

கையிலிருந்துகொண்டு கறடனிபுலீசு
துய்யசெயலகற்றித் துன்மார்க்கஞ்செய்துயவப்பான் 238

வம்பன்செயலாலே வல்லோன்முனிவிறங்கும்
கம்பனிபுலீசு காலிலிருந்துகொண்டு 236

காலென்றுசொல்கழுதை கருமுக்குமுன்னடக்கும்
காலின்றகுமத்திழந்து கடுநரகஞ்சேர்வார்கள் 240

கால்மிருகமானதுதான் கருத்தையுவந்திருக்கும்
மேல்விளக்குகந்தவர்கள் வெந்நகரஞ்சேர்வார்கள் 241

ஆனதனுல்நீங்க ளகத்திலிபுலீசுடைய
மானமழிவகற்றி வாணுளழியுமுன்னே 242

ஈமானிலாறு மிசுலாமிலைத்துடனே
நாமானநற்கலிமா நலமாகத்தானறிந்து 243

மூரிதுதன்னைக்கொண்டு முன்னேனைத்தானறிந்து
சரிஅத்துமகரிபத்துத் தன்னையறிந்துணர்ந்து 244

வாசிதனில்நாமங்கொண்டு பைத்துல்மகுமூதறிந்தால்
பாசவினையகன்று பரன்பாதஞ்சேர்ந்திருப்பீர் 245

தன்னிலறிவுவந்த ல் சைதானும்பீராவான்
மன்னுமனநபுசை மறந்துவிட்டுநீங்களுமே 246

அழுக்கறுத்துமெய்யை யறிந்தவர்கள் முன்சென்றால்
பழுத்தறுக்கநேர்மைதன்னைச் சொல்வாரறிந்துகொள்ளும் 247

செற்றபிணம்போலச் சினத்தைத்தவிர்த்துவிட்டு
மற்றொன்றும்பேசாமல் மௌனமுபதேசித்திரு 248

ஜெகமதிலேகிட்டாது தீதாறுவுங்களுக்கு
அகமதிலேதெளிந்தே யாசித்துவந்திருப்பீர் 249

தீதாறுபார்த்துவந்தால் ஜென்னப்பதிகிட்டியென்றும்
ஆதாரமானவொரு வாண்டவன்றீதாறுகிட்ட 250

ஜடத்தில்வரும்றாகைக் சாற்றுகிறேனுன்கையுந்தான்
திடமுடைய * றாகுசுல்தான் சென்னிதனில்வீற்றிருக்கும் 251

மயிர்தோல்நடுவில் † றாகுமந்திரிதானுற்றிருக்கும்
இயல்பானகல்பதனி லிருக்கும் ‡ ப்ரதானிறு 252

பலமானபீடமதில் பகா § சேவகறாகிருக்கும்
நல்றாகிந்நான்கையுமே நாட்டிவைத்தானந்தருவே 253

திடமுள்ளசுல்தான் செயல்செப்புகிறேன்கேளுமினி
திடமுடையசுல்தானுஞ் செப்புவான்மந்திரிக்கு 254

இறையேவலெடுத்துக்கொண்டே யிகழ்ந்துவிடுவிலகல்தனை
இறையேவலையகற்றிட யிடரூற்விலகலெடுத்தால் 255

கலகம்பிடித்துக்கீழ் கவிழ்ந்துநரகம்மாள்வாய்
வலம்பொருந்துமே வலைமறவாதேநபிசறகை 256

ரண்டாவதிராஜா நவில்வானம் மந்திரிக்கு
நின்றுட்டமெல்லா நினைத்தபடிசெய்யுமென்பார் 257

மூன்றுவதிராஜா மொழிவான்காண்மந்திரிக்கு
வேண்டாதகள்ளுணவு வேசையுவந்திருப்பர்ன் 258

தீண்டாப்பொருளருந்தாற் றிடனுருஞ்சொர்க்கமென்பார்
வேண்டாதசொல்லதனை விரும்பாதேகேடுனக்கு 259

கெட்டசெயலிரண்டுங் கேளாதேதள்ளிவிடு
திட்டமானசுல்தான்சொற் றீர்க்கமுடனிகேட்டால் 260

எட்டாஞ்சுவர்க்கமோ டேகன்தீதார்கிடைக்குஞ்
சட்டமிறசூலுடைய ஷடாஅத்துநீபெறுவாய் 261

ஊர்பேரறியாத வுலகத்தாரேயுங்களுக்குப்
பேர்கொள்வளமைகளைப் பேசுகிறேன்கேளுமினி 262

நீயாரென்றுகேட்டால் ஆதமியாவென்றுசொல்லும்
நீயாருடையமைந்தனென்றால் ஆதமகனென்றுசொல்லும் 263

---

* றாகு சுல்தானென்பது றாகுகுறாசி † றாகுமந்திரியென்பது றாகுசுபுலி ‡ ப்ரதானிறாகென்பது றாகுசாமியா § சேவகறாகென்பது றாகுபறுசகா.

நீயாருடையவும்மத்தென்றால் முகம்மதருமத்தென்னும்
நீயாரடியானென்றால் நாயனடியானென்றுசொல்லும் 264

நீயாருடையஇல்லமென்றால் இபுறாகிமில்லமென்னும்
நீயாருடையகோத்ரமென்றால் இசுமாயீல்கோத்ரமென்னும் 265

உன்கிபுலாஎங்கனென்றால் உடயோன்கருபாவைச்சொல்லும்
உன்பிறப்பாரென்றால் உண்மையுள்ளமூமீனென்னும் 266

நீயெந்தவூரென்றால் நிகழ்த்துங்கருவூரென்று
நீயென்னபிள்ளையென்றால் இசுலாமன்பிள்ளையென்னும் 267

நீயெப்போதிசுலமென்றா லியம்புமறோசுமீயாக்கிலென்று
நேயப்பெருக்கோடு நிகழ்த்துமேகேட்டவர்க்கு 268

உன்பேரென்னவென்றா லுரையுமுகம்மதென்று
உன்பேர்முகம்மதென்றா லுரையுமடையாளமென்பார் 269

அன்பாகக்கேட்டவர்க்கே யடையாளநீர்சொல்லும்
என்பெயர்முகம்மதற்கிங் கெழுத்துநாங்குண்டதுகேள் 270

தலையில்அலிபாகுந் தன்புயமும்கேயாகும்
நிலையீரனமீம்தொப்பூழ் நிகழ்த்திருப்புதலாகும் 271

சந்தாபமில்லாமல் தகுமாகவேநீரும்
இந்தநல்லநான்கெழுத்தால் என்பேர்முகம்மதென்னும் 272

ஈமானென்னவென்றால் இயம்புங்கலிமாவென்று
ஈமானிருப்பதெங்கே யியம்புமெனக்கேட்டால் 273

ஈமான்தான்அச்சத்திற்கும் இச்சைக்கிடையிலென்னும்
நாமானமாகநடக்குஞ் செயலிதுவே 274

தொழுதுவருகிறீரோ சொல்லுமெனக்கேட்டால்
தொழுகையகுமதென்று தொகுத்துரையுமப்போது 275

எப்படியாகும் தியம்புமெனக்கேட்டால்
அப்போதுரையும் அறிவானநான்கெழுத்தை 276

நிலையேஅலிபாகும் நிற்கும்றுக்கூகுகேயாகும்
நிலைசஜதாமீமாகும் நிகழ்த்திருப்புதலாகும் 277

இந்தநல்லநான்கெழுத்தா லியம்புநீர்அகுமதென்றே
உந்தன்வணக்கமென்ன வுரையுமெனக்கேட்டால் 278

நிலையாம்அலிபும் நீன்றமரவணக்கம்
மிலையுநல்லேயும் மிருகஜாதியின்வணக்கம் 279

புகழ்ச்சஜதாமீமும் புழுப்பூச்சிவணக்கமதாம்
அகலாதயிறுப்புதலால் ஆனவலைவணக்கம் 280

மரத்துடையவணக்கம் வழுத்துகிறேன்கேளுமினி
மரத்துடையதிக்கிர்வழுத்தும் அல்லாகுவென்றே 281

மிருகஜாதியின்திக்கிர் விளம்பும்அல்லாகூவோடு
பெருகும்கையுல்லாவும் பேசும்காலூறதுவே 282

ஊர்வினதின்திக்கிர் உரையல்லாகுமுமீத்து
பேர்பெருமலைவணக்கம் பேசுகிறேன்கேளுமினி 283

மலையின்திக்கிர்வழுத்தும் அல்லாகுதாயிம்தையான்
நிலையார்வணக்கமிதே நிகழ்த்துகிறேனன்றாக 284

பஞ்சவுடல்வணக்கம் பகர்ந்தேனறிந்துகொள்ளும்
அஞ்சுநிலையு மறையுகிறேன்கேளுமினி 285

ஒன்றாவதுதொழுகை யுடையோன்மிகுரூபாம்
ரண்டாவதுளூகு நாயன்கருபாவாம் 286

மூன்றாவதுமகாம்மகுமூறில் மூன்னோன்றொழுகையதாம்
நான்காவதுதொழுகை நாயன் அறுசுதன்னில் 287

ஐந்தாவதுபகும் ஆதிகுருசுதன்னில்
இந்தநிலையைந்து மியம்பினனிவ்வுடலில் 288

இந்தநிலையறியார் இமாமினுக்குகளுமாகும்
முந்தநபியிறசூல் மொழிந்தாற்குறுஆனில் 289

வெற்றியுடல்வேசிதனை விளம்பினேனாகாகும்
பத்தினியில்வேசை பகர்ந்தேன்ஜடலமதாம் 290

கள்ளரிற்கொடியகள்ளன் கத்தோனவனாகும்
கள்ளமனதிற்பெரியபொய் கழறினேன்ஜடலமதாம் 291

அன்றன்றுசெய்தபிழையைத் தொகுத்துந்தான்றொழுதால்
அன்றன்றுதீர்ந்துவிடும் அறியுமிதுதிடனே 292

உகப்பானுடலி லுடையோனைந்துபஞ்சிபூதம்
வகுப்பானஐவீட்டில் வல்லோனமைத்துவைத்தான் 293

வன்னியுடன்வாய்பு மண்சலமோடாகாயம்
திண்ணமாஐவீட்டில் தீர்க்கமாயாளுகிறார் 294

பஞ்சபூதமொன்றிக்குப் பங்கதுவுமைந்தாகும்
ஐயைந்திருபத்தைந்தாவான தொருபங்காகும் 295

பையில்நிறைந்தவகை பாங்குடனேயாவருக்கும்
மெய்யாகச்சொல்லுகிறேன் விவேகமுடன்கேளுமினி 296

மண்ணுடையபங்கு வழுத்தேன்புநரம்பாகும்
பின்னுஞ்சதைபோல்ரோமம் பேசினேன்பங்கைந்தாம் 297

தண்ணீருடையபங்கு சாற்றுகிறேன்கேளுமினி
கண்மூளைநாசதினீர் தண்ணீர்வெயர்வைஜலப் 298

காற்றுடையபங்கு கழறுகிறேன்கேளுமினி
காற்றுநிலைநடுக்கல் கண்மூச்சிக்கொட்டாவி 299

நெருப்புடையபங்கு நிகழ்த்துகிறேன்கேளுமினி
நெருப்புப்பசிதாபம்சோம்பல் நித்திரைவெறிசிரிப்பாம் 300

ஆகாயத்தின்பங்கை யருளுகிறேன்கேளுமினி
வகாயிருபதைந்துபங்கும் வழுத்துகிறேன்கேளுமினி 301

விருப்பமுடன்ஜீன்கூறை விளம்புகிறேனிப்போது
கற்பவிபரமெல்லாங் கழறுகிறேன்கணக்காக 302

மண்ணுடையகூறும் வழுத்துகனமாகும்
தண்ணீரின்கூறு சாற்றினேனிருமலதாம் 303

விசையானகாற்றின்கூறு விளம்பினேன்பேச்சாகும்
அசையாநெருப்பின் கூறருளினேன்கேள்வியதாம் 304

ஆகாசக்கூறுமருளினேன் பார்வையதாம்
ஆகாசமொன்றி லடங்கா தரூபமதாம் 305

பரமனுடையபங்கு பகருகிறேன்கேளுமினிப்
பரவும்பார்வைகேள்வி பன்னுருசியொடுமணமாம் 306

பேசுகிறேனிப்போ பெரியோன்சிபத்ததையும்
ஆசையதூறாகு அசிலுமேயிப்போது 307

வாச்சிதுநம்முடலில் மனதிலறிந்துகொள்ளும்
காட்சியாகும்மிதனைக் களிப்போடறிந்துகொள்ளும் 308

ஆமான்வள்ள லரியநபிசிபத்தும்
ஈமான்பிசுமிலாம் இசைதெளகீத்மகரிபத்து 309

நாட்டினனம்முடலில் நாமறிந்துவணங்குதற்கு
மூட்டுகின்றசரீர முப்பத்திரண்டங்குலமாம் 310

பூட்டினன்மூச்சைப் பொங்கமுடனிரவுபகல்
ஈட்டினளிரவுபகல் இருபத்தோராயிரத்தறுநூறும் 311

இரவும்பகலாக விலங்கவேகற்பித்தான்
துறவுதெரியாமல் துஞ்சுகிறார்மானிடர்கள் 312

துய்யகமலாவைத் துரிசாகமூச்சேற்றிப்
பையவேகண்டமதிற் பாங்கறிந்துதானடர்தால் 313

துய்யஅருமதையுந் துரிசினவில்நீகாண்பாய்
பைத்துல்முக்கத்தீசு வளர்ந்தபுருவத்தினிடை 314

ஆதமலையறபாத்துமலை யருளுகிறேன்கேளுமினி
ஆதமலையறபாத்துமலை யறியசிரசாகும் 315

வேதமலைபொன்னிமலை விளங்குகின்றகேள்வியதாம்
வேதமனைபொன்னின்மலை விளங்குகிறேன்கேளுமினி 316

வாசமலைவயிரமலை வழுத்துகிறேன்கேளுமினி
வாசமலைவயிரமலை வழங்குகின்றபார்வையதாம் 317

இருளின்மலைபதனை யியம்புகிறேனிப்போது
இருளின்மலைதானு மெழுமூச்சுத்தானாகும் 318

உந்தமுரீதை யுரையுமெனக்கேட்டால்
எந்தமுரீதுநாட்ட மேகன்வப்பாகும் 319

முரீதுமாரென்னவென்றால் மொழிவாய்நீறாகதுதான்
முராஜாத்ததென்னவென்றால் மொழிவாய்நீபுத்தியென்றே 320

தாலிபுஎன்னவென்றால் சாற்றுநீஜடலமென்று
தாலிபுமுரீதும் தாத்தும்சிபத்துமதே 321

தாத்தும்சிபத்துந் தன்னுடலுயிராகும்
நேத்தியுடனிதனை நிச்சயமாககண்டுகொள்வீர் 322

தாயுடையபங்கைச் சாற்றுகிறேன்கேளுமினி
தாயுடையபங்கென்பு சௌரோமம்நரம்பு 323

தகப்பனின்பங்கு சதைமூளைதோலிரத்தம்
தகப்பனின்பங்கு சதைமூளைதோலிரத்தம் 324

ஞானமணிவாசல் நவிலுகிறேன்கேளுமினி
ஞானமணிவாசல் நலமானநபுசுத்தலம் 325

ஞானமணிவாசல் நலமானபுருவத்திடை
ஞானமணிவாசல் நலமானநெற்றியதாம் 326

உச்சியதுமக்கம் உயிர்முகம்மதுதாமாகும்
இச்சையுடனிதனை யெழிலாயறிந்துகொள்வீர் 327

தூண்டாமணிவாசல் துரிசிறுநுக்கதாகுங்
கண்டாமணுரூபங் காட்சியதுதானாகும் 328

கருபாவதுநான்குங் கழறுகிறேன்கேளுமினி
கருபாவுந்தாமரைக்காய் கருத்தாலறிந்துகொள்ளும் 329

மதினமதுநெஞ்சு வழுத்துகிறேன்கேளுமினி
மதினமதுநெஞ்சு வழுத்தினேன்றேர்ந்துகொள்ளும் 330

மக்கமதைநன்றாய் வழுத்துகிறேன்கேளுமினி
மக்கமதுதான் வளருகின்றகலபாகும் 331

ஆதத்தைப்படைத்தவகை யருளுகிறேன்கேளுமினி
ஆதநெறியுள்ள ஐந்துவகைமண்ணாதும் 332

பாடுமுழங்காலளவும் பாரிலுளமண்ணாகும்
துடையாவும்கௌலல்கவுதற் றய்யகுளத்தின்மண்ணாதும் 333

நாபியிடையளவு நரகத்துமண்ணாதும்
மேவுசொர்க்கமண்தான் மேல்வயிறுதானாதும் 334

கண்டத்திநெஞ்சளவுங் கதிதன் அறுசுமண்ணாம்
மண்டையைக்குறுசுமண்ணால் வகுத்தானே யாதியுமே 335

வலிய அலிபுநிலை வளர்ந்தப்புருவத்தினிடை
மெலியாதமேபேதையும் விளங்குமிருபுருவம் 336

மற்றொருதேநெற்றியதாம் வழுத்துகின்றஜீம்தலையாம்
வெற்றியுள்ளகேய்ரண்டும் விழும்புமிருதோளாகும் 337

தாலிரண்டுந்தானே தரித்தமுழங்காலிரண்டாம்
மாலுற்றமேசேயும் வழுத்துமிநவிலாக்குடையாம் 338

சீமிரண்டுந்தானே சிறந்தவிருமாராகும்
தேமுள்ளசாதுலாதும் திருக்காதிரண்டாகும் 339

சொன்னதொருகேலேயுந் தொக்குமிருகாலிடை
வன்னமுள்ளஐன்கைனும் மலருமிருகரமாம் 340

பெருக்கமுள்ளபேகாபும் புறக்கையிருகட்டாதும்
முருக்கமுள்ளகாவும் முதுகந்தண்டுதானாதும் 341

தீர்க்கமுள்ளலாமும் சிறந்ததுடைப்பொருத்தாம்
நீக்கமிலாமீமு நெஞ்சமுதன்மூளையதாம் 342

அறிவுடைய நூனும் ஆகுநாகுமகாமே
பிரியமுள்ளவாவும் பேசினேனுந்தியதாம் 343

இன்னமொருகேயு மிலங்குகின்றகல்பாகும்
அன்புள்ளலாமலிபுரம் அம்சாவமூச்சாகும் 344

மானிடரேறாகு வந்தவகைநீர்கேளீர்
தானேயொருநுகதாற் சகலமுந்தானாகும் 345

அலிபுக்குக்கீழ்மேலால் அடுதிருக்குஞ்சூழ்ச்சமது
வலியலாமும் அலியும் வகையதுவுங்கீழ்மேலாய் 346

மாற்றிப்பிடிக்க வகையறியாமானிடர்க்குட்
டோற்றும்பதினான்குலகுஞ் சூரியனுஞ் சந்திரனும் 347

வந்தவிதிமுறையால் மதகபொல்லாம்பாழாச்சு
அந்தவிதத்திலொரு அணுமாத்திரம்புவியில் 348

வாயினால்மானிடர்க்கு வகைவிபரஞ்சொன்னாக்கால்
ஓயாப்பெருங்கவலையூணுறக்கமற்றுவிடும் 349

துனியாவைகப்புகின்ற தோசியர்க்குக்கிட்டாது
அநியாயப்பாவிகட்கு மணுவளவுஞ்சொல்லாதே 350

மண்ணின்புகுதன்னை மறந்தவர்க்குச்சொன்னாக்கால்
திண்ணமதுவாகும் தீதாறுதான்கிடைக்கும 351

சாலமதையறிந்து சாத்தில்கலிமாவுவந்தால்
கோலமதுகொள்ளுங் குதாயினொளிதுலங்கும் 352

மீமுடன்லாமலிபை விரைந்தசரந்தொடுத்தால்
காமீலுமீயாகும்காண்பாய் குதாவொளிவை 353

பஞ்சபூதமைந்தினாற் பகசவுந்தான்கூடாது
மிஞ்சும்வகையிதுவே மேலானநல்வழியாம் 354

வருஷமதுநம்முள்ளே வழுத்துகிறேன்கேளுமினி
யொருவருடமுந்நூற் றறுபதுநாளாகும் 355

முந்நூற்றறுபதுநாள் மொழிந்தநல்லமாங்கிஷமாம்
முந்நூற்றறுபதுநரம்பாய் முதல்வனுண்டாக்கிவைத்தான் 356

முந்நூற்றறுபது துண்டுதோள் முளியாமுண்டாச்சு
முந்நூற்றறுபதுமூளியுமொருமுன்மலைக்கேயீடாச்சு 357

முந்நூற்றறுபதுமலையு முந்நூற்றறுபதுநரம்பாம்
முந்நூற்றறுபதுநரம்பு முளைக்கின்றபூண்டாச்சு 358

முந்நூற்றறுபதுரோம முளைத்தெழுந்தபுறபூடாம்
முந்நூற்றறுபதுபிஞ்சு முந்நூற்றறுபதுகொத்துகளாம் 359

வுருவமதற்கிணையாய்வல்லோனமைத்துவைத்தான்
கருதவும்கூடாது கணக்கிலுமடங்காது 360

சடத்தினதிசயங்கள் சாற்றமுடியாதுக்கண்டீர்
கடலினதிகமது கத்தன் குறுஆனிற்சொன்னான் 361

நடப்புள்ளபாதையைத் தானவின்றேன்காணுங்களுக்கு
நடவாமுறைகளைத்தா னாட்டவில்லை இப்போது 362

ஆதமதுதம்மாகும் அவ்வெழுத்துமூன்றாகும்
ஆதமென்ற மூன்றெழுத்தும் அவ்வுஉவ்வுநவ்வாகும் 363

அவ்வுஉவ்வுநவ்வும் ஆகூவுதானாகும்
செவ்வி ஆகூவும் செப்பாதிமூச்சுடராம் 364

முச்சுடரானதுவுமும்மண்டலந்தானாகும்
இச்[illegible]புடலிலதை யியம்புகிறேன்கேளுமினி 365

ஐம்பத்தோராட்சரமா யாண்டவனமைத்துவைத்தான்
சம்பத்தனின் தகுதியினைச்சொல்லுவன்கேள் 366

ஈறதையுந்தாரைதனி லெழுத்துமதுநான்காகும்
வீறுள்ளமூலமதில் விளம்பினேனான்கெழுத்து 367

கூறானநாவுதனிற் கூறுமொருபத்தெழுத்து
தாறானமுக்கோணமதிற் றறிப்பித்தான்ரண்டெழுத்து 368

பேறானகலைதனிலே பேசும்பதினாறெழுத்து
நேரானபேச்சாட்டமதி நிறைத்துவைத்தான்ரண்டெழுத்து 369

மார்க்கமுள்ள குருப்பரத்தின் மறைத்துவைத்தானோரெழுத்
தீர்க்கமுடன்பன்னிரண்டைச் சென்மத்திற்செம்மவைத்தான் 370

தச்சில்லாமாளிகையில் தானவனொளிந்துகொண்டான்
நிச்சயமாத்தானே நிகழ்த்துகிறேன்கேளுமினி 371

ஒளித்தவனைக்காண ஒருவரால்முடியாது
பழக்கவேயோதிப்படி யேறிச்செல்கவென்றான் 372

எணிப்பழுவறுந்தா லேறிச்செல்வதெந்தவிதம்
ஆணிகலிமாப்பிடியா லசையாமற்றாணிறுக்கி 373

ஏறியங்கேபார்த்தா லேகனுடதீதாறும்
பேறிதுவேறென்றே பேசுவார்வீணர்களே 374

மெய்யானநற்பொருளை வீணாக்கிவிட்டுவிட்டுப்
பொய்யிலேயுன்மனதைப் பூட்டுவான் முழுக்குருடன் 375

கூறுகின்றவிம்மொழிதான் குருடன்கைகோலாகும்
ஆறுண்டவர்கூட்டதிலாவார்கள் தீனோரே 376

ஆசையதுசொன்னே னகற்றியேதள்ளிவிடும்
பாசவினையகலப்பார்த்துத்தெளிந்துகொள்ளும் 377

தெண்டித்தபேர்கள்தம்மைத் தேடிப்பிடித்துக்கொள்ளும்
கண்டிதமாய்ச்சொன்னேன் காப்பாய்குருபதத்தை 378

எண்சாணுடலி லேகனமைத்தவகை
வெண்மூச்சுடர்மூன்றாய் விழுங்கினதுநீகேளாய் 379

ஆதியனாதிசோதியடங்கினதுமுன்றிலேதான்
நீதியுடனறிந்து நீர்பாருந்தீனோரே 380

அரூபசுரூபம்ரெண்டு மாணோடுபெண்ணாச்சு
அருளாணும்பெண்ணும் அல்லாமுகம்மதுவாம் 381

அல்லாமுகம்மதுவும் அகதும் அகுமதுவாம்
சொல்லும்அகதுகதும் சோதிறாகுறாகானி 382

அடவுறாகுகானி யரியவுடலுயிராகும்
உடலுமுயிரு முணவுநினைவாகும் 383
உணவுமவுத்தாகு முரைநினைவுகயாத்தாகும்
இணையுமீயாணிசிலா மின்னபடி யென்றறிந்து 384
நாமானம்கலிமா நாட்டப்வைத்தேயென்னும்
சியான்றனமிலவே செப்பமுடியாதுகண்டீர் 385
கனியானகலிமாலைவக் கருத்தீலெழுப்பியின்னித்
துனியாவிலறியாதார் தோசுப்பெரும்பாதகராம் 386
துணியாவினைசைகொண்டாற் துலங்குங்கலிமாவறியார்
அநியாயக்காரன்று மவர்நெற்றிலெழுதப்படும் 387
நபுசுடையஞாய நவிலுகிறேன்கேளுமினி
நபுசமமாறத்துத்தானு நலமறியார்க்காபர்குணம் 388
நபுகலெவ்வாமத்தென்பது நல்லதொருமீன்குணம்
நபுசுமுகில்மானென்பதுவுநல்ல அவுலியாக்கள்குணம் 389
நபுசுமுத்மயின்னுவல்ல அன்பியாக்கள்குணம்
சொகுசுடனேயிதனைத் துரிதாயறிந்துகொள்ளும் 390
வாழ்வுதீவுபன்னீராயிரம் வழுத்திமேனன்முன்புறமாம்
பாழ்வுதீவுபன்னீராயிரம் பகர்ந்தேன்பின்புறமாய் 391
காலமதுநான்கும் கழறுகிறேன்கேளுமினி
காலமுதன்மையது காற்றுடையகாலமதாம் 392
மாற்றில்லாவெயிற்காலம் வாலீடந்தானாகும்
பேற்றில்லாமழைகாலம் பெருமனுடர்தஙகாலம் 393
மாறுப்பனிக்காலம் வயதுசென்றகிழவனுமாம்
நேரானதிம்மூன்று நின்வயத்தின்விபரம் 394
முன்னேன்சிபத்தேழு மொழியுகிறேன்கேளுமினி
முன்னேன்பேச்சுமூச்சு முன்பார்வைகேள்வியுமாம் 395
அந்தவுடல்யாது மறிந்துகொள்ளும்றாகு அதில்
இந்தவகையேழு மிறைவன்சிபத்தாகும் 396
நபியுடையறவுலாவும் நடுநெஞ்சிதானாகும்
நெறியுள்ளபாத்திமத்து நெஞ்சிக்குலைக்கொழுந்தாம் 397
விருப்பமுள்ள அசனுசைனும்விலாகுடையிரண்டாகும்
பெருப்பமுள்ளவிதனைப் பேணியறிந்துகொள்வீர் 398
சத்தழுடியாகூர் தன்ரோமமின்னதாம்
முத்தானவைங்தெழுத்துமுகாமிலேசொல்லுகிறேன் 399

லாசூக்மகாமில் லாவென்னெழுத்ததுவாம்
நேசமலக்கூத்மகாமில் நிகழ்த்துகின்றலாவெழுத்தாம் 400

ஜெபறூத்மகாமில் சிறந்தவொருஇல்லதுவாம்
நவிலுமலாகூத்மகாமில் நல்லவொரு அல்லதுவாம் 401

ஆகூத்மகாமில் ஆகாசப்கூவதுமாம்
யாகூ அவனுகும் ஆதியொருவனுமே 402

நீதிதனையறிந்து நேசவுருவாக்கிக்கொள்ளும்
ஆதியொருவனுட அவ்வெழுத்தைதானறிய 403

வாத்தியெழுத்துக்கு வகைகேளும்பீரிடத்தில்
பார்த்துப்படித்துப் பண்புடனேநீகேட்டால் 404

நாட்டத்தின்படியே நவில்வார்களுந்தனுக்கு
வாட்டமதுதீர்ந்துவிடும் வல்லோன்தீதாறுகிட்டும் 405

வஸ்திசெய்யும்பக்கீர்வகை வழுத்துகிறேனான்குவகை
கிஸ்தியாய்பக்கீர் செப்பினேன் ஹக்கோர்வு 406

தபக்காத்தியாடக்கீர் செய்யிதுற்றசூல்வழியாம்
உப்பானசறுவருதிபக்கீ ருறையாதகபிவழியாம் 407

காதிரியாபக்கீர் காதிர்முகியித்தீனும்
நீதமுடன்தன்னுடலில் நிற்கும்வகைபக்கீர்நான்கும் 408

தன்சரீரத்தினிலே சாற்றுகிறேனபக்கிறுவகை
தன்னுடையயூறு சாற்றும் சிஸ்தியாவாகும் 409

தன்னுடையதிக்கீர் சாற்றுந்தபக்காத்திய்யாவாம்
தள்னுடையஎகின் சறுவருதியாவாகும் 410

ஆண்டவனினேவ லருள்காதிரிய்யாவாம்
மீண்டுஞ்சரிஅத்தையும் வியனுர்தரீகத்தையும் 411

மேலோர்அகீகத்தையும் விளம்பினேன்மகரிபத்தும்
நாலுவகையாலிறையோ னுமமறிந்துவணங்கவேண்டும் 412

நன்றாறெழுகடல்நம்முள் நவிலுகிறேன்கேளுமினி
ஒன்றுவதுகடல்தா னுறுதியுள்ளதீதாறு 413

ரண்டாவதுகடல்தானோர்ந்து துவாக்கேட்கிறது
முண்டகமூன்றுங்கடற்றான் முன்னவன்தக்கீறுகும் 414

நாலாவதுகடல்தா னுயனுடநாட்டமதாம்
ஆலமதில்தீனோரே யணுகாதவன்னெருப்பு 415

தீண்டாதவைந்தாங்கடல் நீனுடையபுகழாகும்
ஆண்டண்டாதாறுங்கட லாலம்பனுவாகிறதாம் 416

எழாங்கடற்றுனே னேகனுடஎகீமாம்
காலமதிங்கின்னமொன்று கழறுகிறேன்கேளுமினி 417

ஒருவிரற்கிடைகபுற முரைக்குகிறேன்மூக்காகும்
திரமானமூன்றுவிரற்கிடை செல்வகுருன்காதாகும் 418

நாலுவிரற்கிடைமசிது நல்லதொருவாயாகும்
மாலுமையாடும்மூன்றும் வணங்கியறிந்துகொள்ளும் 419

தலையிலிருட்டதென்ன சாற்றுமெனக்கேட்டால்
தலையில்சரிஅருதுந் தரிகத்துமிருக்குதென்னும் 420

நெற்றியிலிருப்பதுதா னெடியோன்சுரூதென்றுரையும்
உத்தகண்ணிலிருப்பதென்ன உரையுமெனக்கேட்டால் 421

கண்ணிலிருப்பதுதான் கழறிரண்டுமுத்தெனவே
திண்ணமுள்ளகாதிலிருப்பதென்ன செப்புமெனக்கேட்டால் 422

காதிலிருப்பதுபாங்குங் காமத்துமென்றுசொல்லும்
மேதினியோர்க்கிந்த வெற்றிபோர்கிட்டாதே 423

மூக்கிலிருப்பதென்ன மொழியுமெனக்கேட்டால்
மூக்கிலிருப்பதுதான் முழங்குசொர்க்கவாசமென்னும் 424

கையிலிருப்பதென்ன கழறுமெனக்கேட்டால்
கையிலிருப்பதுதான் கனசக்காத்தெனவுரையும் 425

நெஞ்சிலிருப்பதென்ன நிகழ்த்துமெனக்கேட்டால்
நெஞ்சிலிருப்பதுதா னெடியவன்சுவர்க்கமென்னும் 426

வயிற்றிலிருப்பதென்ன வழுத்துமெனக்கேட்டால்
வயிற்றிலிருப்பதுதான் வன்னிபசித்தாகமென்னும் 427

பீடமிருப்பதெங்கே பிரித்துரையுமென்றக்கால்
பீடமிருப்பதுதான் பீருகுருவடிவாம் 428

துடையிலிருப்பதென்ன துகுத்துறையுமென்றுக்கால்
துடையிலிருப்பதுதான் துய்யஅதபென்றுசொல்லும் 429

காலிலிருப்பதென்ன கழறுமெனக்கேட்டாற்
காலிலிருப்பதுதான் கத்தன்றருமத்தென்றுசொல்லும் 430

நாவிலிருப்பதென்ன நவிலுமெனக்கேட்டால்
நாவாவதுலௌகு நடுநாக்குக்கல்பாகும் 431

நாக்குமதில்இசுக்கு நல்லவொருமைஇயாகும்
மூக்காவதென்ன மொழியுமெனக்கேட்டால் 432

மூக்கின்சுழிமூளையாம் முன்னோன்அலிபாகும்
நீக்கமறவிதனை நிண்ணயமாகக்கண்டுகொள்ளும் 433

ஈமானத்திலிருப்ப மியம்புமெனக்கேட்டால்
ஈமானில்லைவை யியம்புகிறேன்மெய்யாக 434

ஈமானில்லாகிறது யியம்பினேன்சக்காத்து
ஈமானடபடிதான்ஏகன் அமலாகும் 435

ஈமானுடையோ னென்னுடனேயென்றுசொல்லும்
ஈமானவான நடபடிகளீதாமே 436

தசுபிமணியென்ன சாற்றுமெனக்கேட்டால்
தசுபியதுகபூர்நோன்பு தானுமுவபையுண்டு 437

தம்சிதமென்ன சாற்றுமெனக்கேட்டால்
தப்சித்தாகிறது தானேன்புவமையில்லை 438

நம்முடைய்யசரீரம் நால்வேதந்தானும்
நம்முள்ளே தானறிந்து நாதனைத்தான் போற்றாமல் 439

துனியாவைநப்பி துன்மார்க்கமாநடந்தால்
அனியாயகாரரென்றே யழிநரகிற்றள்ளுவரே 440

வனியாதமக்களிலே மதிகெட்டோர்தானுகி
யினிதானநற்கலிமா இருத்திவணங்காமல் 441

ஐனை வணங்காமல் அவனேவல்தானகற்றி
...யனிபுலீசுடைய மாய்கையதற்குள்ளாகி 442

தீனையுவக்காமல் தீன்கலிமாநடவாமல்
தீனை முகமாறிச் சேரதீர்நரகபதி 443

ஆண்டவன்தீதாறுடனே யரியநபிஷபாஅத்தத்து
மாண்டபின்புதேடினுல் வந்துனக்குக்கிட்டுமோதான் 444

கிட்டாதொருநாளும் கீர்த்தியுள்ளகியாமத்திலே
சுட்டாலுமுங்களுக்குச் சொரணைவரப்போரதில்லை 445

கெட்டாலுங்கேடு கேட்பதேயுச்சிதந்தான்
முட்டாளாய்ப்போகாமல் முயலுங்கலிமாவை 446

எட்டாதொருநாளு மெழுமூச்சைப்போக்கிவிட்டால்
பட்டவர்க்குப்பாடு பயந்தெளியுங்கண்டாயே 447

கெட்டவர்க்குக்கிடைமுதல்கள் கிட்டினதுபோலேதான்
விட்டகுறையிருந்தால் விளங்குமேதீதாறு 448

முத்தகலிமாவல்லால் மொழியவேறொன்றுமில்லைச்
சத்தியமாய்ச்சொன்னேன் தவறாதேயிக்கலிமா 449

புத்தியுள்ளபேர்க்குப் போதுமேயிவ்வறிவு
புத்தியில்லாதார்க்குப் பூக்காதொருநாளும் 450

ஜெகமீழுதுந்தேடினுஞ் சிக்காதேயிவ்வறிவு
அகமதிலேபார்த்துணர்ந்தே யறிவாற்றெளிந்துகொள்வீர் 451

சேகுபீர்முகம்மதுதாட் செப்பினேன்தீதாறை
வாகுபெறவுலகோர்க்கு வழுத்தினேன்வெளியாக 452

பாடிப்படித்துவிட்டாற் பலனில்லைகண்டாயே
பாடிப்படித்தபடி பழக்கஞ்செய்யவேண்டுங்கண்டாய் 453

நாடினால்நாடுவான் நாடாட்டாலொன்றுமில்லை
தேடினால்முன்னிடுவான் தேடாட்டாலொன்றுமில்லை 454

வ[illegible]டிபெ[illegible]ாமல் மவுலூதுவந்திருந்தால்
தே[illegible]ரியுமே[illegible]ாங் தினந்தினமும்பார்த்திருப்பீர் 455

கண்டுபிடி[illegible]கருத்து ளுவந்தவர்க்குக்
கண்[illegible]கல்லும்வாய்த்திறக்குங் கத்தனுவந்திருப்பான் 456

ஆமினல்லஆமி னறிந்துகொள்ளுந்தீனோரே
சீமையெங்கும்போனாலுஞ் சிக்காதேயிவ்வறிவு 457

பார்த்துப்படித்துப் பலன்பெறுங்கோதீனோரே
பார்த்தவர்க்குநல்லபலன் கிடைக்குந்தீனோரே 458

வெள்ளிநல்லதிங்கள் விளங்குகின்றவாரத்திலே
செல்வமுள்ளதீதாறை தீனோர்காளோதிடுங்கோ 459

ஒலுவுடனேதானிருந்து யுண்மையாயோதிடுங்கோ
நலிவின்றிக்கேட்டபடி நன்றாகவேநடந்தால் 460

அல்லாறசூலருளால் அப்பதியிற்சேர்ந்திருப்பீர்
சொல்லுஞ்சொற்கமேபெறுவீர் சுகமுண்டுதீனோரே 461

படித்தவர்க்குக்கோடிபலன் படைத்தோன்கொடுத்தருள்வான்
படித்தோருங்கேட்டோரும் பாத்திகாவோதிடுங்கோ 462

ஆண்டவர்பேராலே அதியாவுஞ்செய்திடுங்கோ
பூண்டசலவாத்தோதி புகழ்திக்கிர்செய்திடுங்கோ 463

ஆமிநல்லாஆமி னறிந்துதவம்பெறுவீர்
பூமிதனில்நல்ல புகழையறிந்துகொள்வீர் 464

அண்ணலிறசூலு வமர்களும்மத்தும்வாழி
திண்ணமுள்ளநால்யார்கள் தீனோரெல்லாம்வாழி 465

அலிமைந்தரான அசனுசைனுமேவாழி
ஒலிமார்க்கொலியாம் உண்மைமுகியித்தீன்வாழி 466

முத்திருபிர்செய்குபீர் முகம்மதருந்தான்வாழி
வற்றாமலைச்சருவில் வரிசைமுகம்மதரும்வாழி 467

படித்தோர்கள்கேட்டோர்கள் பண்புடனேதான்வாழி
நொடிக்குமெல்லோரும்வாழி நூலுரைப்போரும்வாழி 468

பூமியின்மும்மாரி மதிபொழிந்தோர்களும்வாழி
ஆமினல்லாஆமீன் யாறப்பல்ஆலமீனே 469

தீதாறுமாலை-முற்றிற்று.

---

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.
C[illegible] M. S. No. 372. C. 2000 17-2-47.

# புத்தக விளம்பரம்

| வைத்திய புத்தகங்கள் | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| மணிமந்திர வைத்திய சேகரம் | 1 | 0 | 0 |
| புலஸ்திய மகாரிஷி வாதசூத்திரம்-300 | 0 | 12 | 0 |
| உரோமரிஷி சூத்திரம்-100 | 0 | 4 | 0 |
| [illegible]ஸ்[illegible]யமுனி பூரண சூத்திரம்-216 பாடல் | 0 | 8 | 0 |
| [illegible]த்திரட்டு வைத்தியம் 1200 பாடல் | 1 | 4 | 0 |
| [illegible] வைத்திய சிட்கா 1-ம் பாகம் | 0 | 12 | 0 |
| [illegible]ஷி 2-ம் பாகம் | 0 | 12 | 0 |
| தன்வந்திரி கருக்கிடை நிகண்டு-300 | 0 | 8 | 0 |
| ஆயுள்வேத சுருக்கம் | 0 | 12 | 0 |
| திருமூல நாயனார் வைத்தியகாவியம் | 1 | 0 | 0 |
| வைத்திய குறல் பழமொழி விளக்கம்-103 | 0 | 8 | 0 |
| புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம் | 0 | 8 | 0 |
| சோதிட புத்தகங்கள் | | | |
| கௌசிக சிந்தாமணி 1-ம் பாகம் | 0 | 14 | 0 |
| ,, ,, 2-ம் பாகம் | 1 | 0 | [illegible] |
| ,, ,, 3-ம் பாகம் | 1 | 0 | [illegible] |
| நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும் | 0 | 12 | 0 |
| சோதிட மூலாதாரம் | 0 | 6 | 0 |
| சர்வ கினவின் பலன் | 0 | 6 | 0 |
| களவுகாணும் சாஸ்திரம் | 0 | 6 | 0 |
| வீமகவி பாட்டு உரை | 1 | 0 | 0 |
| சுகர்நாடி சோதிடம் | 1 | 0 | 0 |
| சோதிமாமுனிவர் சோதிட கோளம் | 0 | 12 | 0 |
| சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன் | 2 | 0 | 0 |
| சோதிட முகூர்த்த விதானம் | 0 | 12 | 0 |
| கணித முருகசேகரம் | 1 | 0 | 0 |
| ஹோரா சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| நவக்கிரக தோத்திரம் | 0 | 6 | 0 |
| மலையாள மாந்திரீக அரிச்சுவடி | 0 | 5 | 0 |

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலை தெரு, மதராஸ்.